# DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF IV ADDITIONAL CITY CIVIL COURT,**

**CHENNAI-600 104.**

**O.S.No.5488/2019 (C.S.343/2013)**

**Deposition of witness for PW-1**

பெயர் : Hemakumar **24.03.2026**
தந்தை பெயர் : Devendran
முகவரி : No.61, Venkateswara Nagar, Kodungaiyur, Chennai – 600 118
வயது : 63 years.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 24th day March of 2026 .

---

**24.03.2026**

சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டார்.

**PW1 – 6ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

Land Grabbing and cheating குற்றச்சாட்டுகளுக்கு என் மீது Criminal வழக்கு எண். C.C.462/2013 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கில் 5, 6ம் பிரதிவாதிகள் மீதும் மேற்படி கிரிமினல் வழக்கு உள்ளது. நான் அந்த வழக்கில் 2ம் எதிரி. முதல் எதிரி சௌந்தர்ராஜன். அவர் இறந்து விட்டார். இந்த சொத்து சம்பந்தமாக தான் மேற்படி கிரிமினல் வழக்கு போடப்பட்டது என்றால் சரிதான். சௌந்தர்ராஜன் தான் வழக்கு சொத்திற்கு உரிமையாளர். இவ்வழக்கில் 1 முதல் 4 பிரதிவாதிகள் போலியாக தாவா சொத்திற்கு ஆவணம் வைத்திருந்தார்கள். அதனை எதிர்த்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்து அவர்களை தரப்பினராக சேர்த்துள்ளேன். சௌந்தர்ராஜன் எனக்கு விற்ற சொத்தை பின்னர் எனக்கு தெரியாமல் அதே சொத்தை 5ம் பிரதிவாதிக்கு

விற்றுவிட்டார் என்பதால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன். அதே சொத்தை 5ம் பிரதிவாதி 6ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டதால் அவரை தரப்பினராக சேர்த்துள்ளேன். சௌந்தர்ராஜன் எனக்கு விற்ற சொத்தை ரத்து செய்து ஆவணம் தயாரித்து கொண்டார். அதனை எதிர்த்து நான் 6வது உதவி சிட்டி சிவில் நீதிமன்றத்தில் O.S.No.278/2012 என்ற வழக்கை தாக்கல் செய்தேன். அந்த வழக்கு 11.06.2013ல் ஒரு தலைபட்சமாக எனக்கு சாதகமாக தீர்ப்பு ஆகிவிட்டது. இந்த தீர்ப்புரையை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்து முதலில் என் பெயரில் இருந்தது என்றால் சரிதான். வாதி உஷாராணிக்கு நான் 2012ம் ஆண்டு தாவா சொத்தை விற்றுவிட்டேன். வாதி உஷாராணிக்கு விற்ற சொத்தில் பிரச்சனை இருப்பதால் நானே பொது அதிகார முகவராக பவர் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். தாவா சொத்தில் பிரச்சனை இருப்பதால் தான் அந்த சொத்தை நான் வாதி உஷாராணிக்கு விற்றேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு சொத்தை விற்ற பிறகு சொத்தை பார்வையிட சென்ற போது 1 முதல் 4 பிரதிவாதிகள் எங்களிடம் அது அவர்களது இடம் என்று தகராறு செய்ததால் கொரட்டூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தாவா சொத்து காலி இடம். அது எனக்கு சொந்தமான இடம் என்ற நிலையில் அதில் பிரதிவாதிகள் எவ்வாறு சொந்தம் கொண்டாடுகிறார்கள் என்றால் போலியான பொது அதிகார பத்திரத்தை 1ம் பிரதிவாதி தயார் செய்து அந்த சொத்தை 2 முதல் 4 பிரதிவாதிகளுக்கு 1992ம் ஆண்டே விற்றுவிட்டார். நான் தாவா சொத்தை 2007ம் ஆண்டு சௌந்தர்ராஜனிடம் இருந்து கிரையம் வாங்கினேன். இன்று வரை தாவா சொத்து காலி இடமாக தான் உள்ளது. 2 முதல் 4 பிரதிவாதிகள் என் மீதும், 5, 6ம் பிரதிவாதிகள் மீதும், கிரிமினல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)**

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

//SD//

IV Addl. Sessions Judge.
24.03.2026 IV Additional Court.